# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2264/9 - 2022 ජනවාරි මස 25 වැනි අඟහරුවාදා - 2022.01.25

*2264/9 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 40/1973* (I)

**(222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு தொடர்பான கட்டளைச் சட்டம்**

*(222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 2 ஆம், 3 ஆம் பிரிவுகளின்கீழ், சுகாதாரஅமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கெஹெலிய ரம்புக்வெல்ல,**
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2022, சனவரி 25.*

ஒழுங்குவிதிகள்

காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக, 1925 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 28 ஆந் திகதிய 7481 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தானியங்களைக் களஞ்சியப்படுத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகளும் அங்கிலொஸ்டோமியாசிஸ் தொடர்பான ஒழுங்குவிதிகளும், இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :-

(1) அவற்றின் 3 ஆம் ஒழுங்குவிதியில், "பொது இடம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் :-

" "பொது இடம்" என்பது, உரிமை என்றவகையாகவேனும் அல்லது வேறுவகையாகவேனும், கொடுப்பனவின் மீதேனும் அல்லது அதுவில்லாமலேனும், வரவழைப்பின் மீதேனும் அல்லது அதுவில்லாமலேனும் பொதுமக்கள் அணுக்கத்தைக் கொண்டிருக்கும் ஏதேனும் இடம் அல்லது பொதுப் போக்குவரத்தில் பயன்படுத்தப்பட்ட ஓர் இடப்பெயர்வு முறை என்று பொருளாகும்.";



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) அவற்றின், 99 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதிகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

“100. பணிப்புகளும் வழிகாட்டுநெறிகளும் மற்றும் சுற்றறிக்கைகளும் :

(1) இலங்கை முழுவதற்குமான முறையான அதிகாரியானவர், மக்களின் காப்புக்கு அவசியமென அவர் கருதுமிடத்து காலத்துக்குக்காலம், நோய்க் கட்டுப்பாடு மற்றும் நோய்த் தடுப்புக்காப்பு வழிமுறைகள் தொடர்பான நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக்கின்ற அத்தகைய பணிப்புகளையும் , வழிகாட்டு நெறிகளையும், சுற்றறிக்கைகளையும், அறிவுறுத்தல்களையும் அல்லது பத்திரிகைக்கான வெளியீடுகளையும் வழங்கலாம். அத்தகைய நோய்க்கட்டுப்பாடு மற்றும் நோய்த் தடுப்புக்காப்பு வழிமுறைகள் தொடர்பான ஏதேனும் விடயத்தை உள்ளடக்கக்கூடிய அத்தகைய பணிப்புகளும், வழிகாட்டு நெறிகளும், சுற்றறிக்கைகளும், அறிவுறுத்தல்களும் அல்லது பத்திரிகைக்கான வெளியீடுகளும், இலங்கை முழுவதும் தொடர்பில் முறையான அதிகாரியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(2) உப ஒழுங்குவிதி (1) இன்கீழ் வழங்கப்பட்ட அத்தகைய பணிப்புகள், வழிகாட்டுநெறிகள், சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் அல்லது பத்திரிகைக்கான வெளியீடுகளுடன் இணங்கியொழுகுதல் ஒவ்வோராளினதும் கடமையாதல் வேண்டும்.

101. (1) ஆளொருவர் இலங்கை முழுவதற்குமான முறையான அதிகாரியினால் விலக்களிக்கப்பட்டாலொழிய, கொரோனாத் தொற்றுநோய் 2019 (கொவிட்-19) என்பதற்கெதிராக முழுமையாகத் தடுப்பூசியேற்றப்பட்டுள்ளமைக்கான எண்பிப்பின்றி ஏதேனும் பொது இடத்தினுட் பிரவேசித்தலாகாது.

இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்காக “முழுமையாகத் தடுப்பூசியேற்றப்பட்டுள்ளமை” என்பது, இயைபான ஆள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறு இயைபான தடுப்பூசியேற்றலின் தேவைப்பட்ட மருந்தளவுகளைப் பெற்றுக்கொண்டுள்ளார் என்று பொருளாகும்.

(2) இலங்கை முழுவதும் தொடர்பில் முறையான அதிகாரியானவர், காலத்துக்குக்காலம் கொரோனா வைரஸ் தொற்றுநோய் 2019 (கொவிட்-19) என்பது தொடர்பாகப் பின்வருவதனைத் தீர்மானித்தல் வேண்டும் :-

(அ) முழுமையாகத் தடுப்பூசியேற்றப்பட்டமைக்கான எண்பிப்பு ;
(ஆ) ஆளொருவரைத் தடுப்பூசியேற்றலிலிருந்து விலக்களிப்பதற்கான விதிவிலக்கான சூழ்நிலைகள் ; அத்துடன்
(இ) தடுப்பூசியைப் பெறுவதற்குத் தகவுடைய வயதுத் தொகுதியினர்.

(3) உப ஒழுங்கவிதி (2) இன்கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு தீர்மானமும், ஒரு வழிகாட்டுநெறியாக அல்லது சுற்றறிக்கையாகச் சுகாதார அமைச்சின் அலுவலக முறையான இணையத்தளத்தில் வெளியிடப்படுதல் வேண்டும் அல்லது ஒரு பத்திரிகை வெளியீடாக அல்லது ஒரு பொது அறிவித்தலாக வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) கொரோனா வைரஸ் தொற்று நோய் 2019 (கொவிட்-19) என்பதற்கெதிராக இயைபான தடுப்பூசியேற்றப்படுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள ஆட்களுக்கு வழங்கப்பட வேண்டிய விலக்களிப்புச் சான்றிதழ், காலத்துக்காலம், இலங்கை முழுவதும் தொடர்பில் முறையான அதிகாரியினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளின் மூலம் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகள் 2022, ஏப்பிறல் 4 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.”.

EOG 01-0252

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.